ONE TWO ACADEMY

10 - ஆம் வகுப்பு

தமிழ்

இயல் - 5

மதிப்பெண்கள்:-50 **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. அருந்துணை என்பதைப் பிரித்தால் .....
   அ) அருமை + துணை ஆ) அரு + துணை
   இ) அருமை + இணை ஈ) அரு + இணை

2. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ..... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்.....
   அ) அமைச்சர், மன்னன் ஆ) இறைவன், மன்னன்
   இ) அமைச்சர், இறைவன் ஈ) மன்னன், இறைவன்

3. திருவிளையாடற்புராணம் படலங்களின் எண்ணிக்கை .....
   அ) 64 ஆ) 96
   இ) 30 ஈ) 18

4. மேரி மெக்லியோட் பெத்யூன் என்னும் அமெரிக்கக் கல்வியாளரின், வாழ்க்கையை 'உனக்குப் படிக்கத் தெரியாது' என்ற தலைப்பில் நூலாகப் படைத்தவர்
   அ) அகிலன் ஆ) கமலாலயன்
   இ) கீதாலயன் ஈ) ஜெயகாந்தன்

5. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது. ..... வினா. 'அதோ அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது .....விடை
   அ) ஐயவினா, வினா எதிர் வினாதல்
   ஆ) அறிவினா, மறைவிடை
   இ) அறியாவினா, சுட்டுவிடை
   ஈ) கொளல் வினா, இனமொழி விடை

6. பிறருக்குப் பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது .....
   அ) ஏவல் வினா ஆ) கொளல் வினா இ) ஐய வினா ஈ) கொடை வினா

7. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

8. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல்
இ) கல்வி ஈ) இலக்கியம்

9. மறுத்துக் கூறும் விடை .....
அ) சுட்டு விடை ஆ) மறைவிடை
இ) ஏவல்விடை ஈ) நேர் விடை

10. ஆசிரியர் மாணவனிடம் இப்பாடலின் பொருள் யாது?
அ) அறிவினா ஆ) ஐயவினா
இ) அறியாவினா ஈ) கொளல்வினா

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 8 X 2 = 16

11. செய்குதம் பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

12. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.\

13. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? இதோ.
இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே!
மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

14. சதாவதானம் குறிப்பு வரைக.

15. வினா எத்தனை வகைப்படும் அவை யாவை?

16. குறிப்பு விடைகள் எத்தனை? அவை யாவை?

17.தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

ஆ) வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

18.அகராதியில் காண்க.

அ) தூவல் ஆ) மருள்

19.தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.

1. பசுமையான .....ஐக் ..... கண்ணுக்கு நல்லது.(காணுதல் /காட்சி)
2. பொது வாழ்வில் ..... கூடாது. ..... இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல் / நடிப்பு)

20.கலைச்சொல் அறிவோம்:

அ) Emblem – ஆ) symbolism –

III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8

21.முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை

இன்மை புகுத்தி விடும். இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

22.மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

23.உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகை யில் எடுத்துரைப்பீர்கள்?

IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8

24.இறைவன், புலவர் இடைக்காட ன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

25.தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை -மேற்கண்ட குறிப்பு களைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். **1 X 8 = 8**

26. பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு - நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு- நூல் ஆசிரியர்.

27. படிவத்தை நிரப்புக.

All the Best | One Two Katral maiyam

நூலக உறுப்பினர் படிவம்

_____ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் _____

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் உறுப்பினர் எண்

1. பெயர் _____
2. தந்தை பெயர் _____
3. பிறந்த நாள் _____
4. வயது _____
5. படிப்பு _____
6. தொலைபேசி எண் _____
7. முகவரி _____
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) _____

நான் _____ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ_____, சந்தா தொகை ரூ_____ ஆக மொத்தம் ரூ. _____ பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :
நாள் : தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன்_____ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)